**ரிதிகம பிரதேச சபை**
**குருணாகல் மாவட்டம்**

-------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 29 ஆந்திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கை 2019 மே 31 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 ஜுன் 20 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து ரிதிகம பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

**கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | ரம்படகல்ல வாசிகசாலையை அபிவிருத்தி செய்வதற்காக செலவிடப்பட்ட ரூபா 814,642 ஆன தொகை மூலதனமாக்கப்பட்டிருக்க வில்லை. | உரிய செலவினம் மூலதனமாக்கப்பட வேண்டும். | இப்பெறுமதி எதிர்வரும் ஆண்டில் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | 2005 பெப்ரவரி 28 ஆம் திகதி கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 165,000 பெறுமதியான டேலர் கணக்கீடு செய்யப்பட்டிருக்க வில்லை. | நிலையான சொத்துக்களில் மூலதனமாக்கப்பட வேண்டும். | நிதிக்கூற்றுகளில் மோட்டார் வண்டி மற்றும் வண்டி என்பனவற்றின் கீழ் இந்த டேலரின் பெறுமதி கணக்கீடு செய்யப்படாததை கண்டறிந்து கணக்கீடு செய்யப்படும். |
| (இ) | மீளாய்வாண்டிலும் அதற்கு முற்பட்ட ஆண்டுகளிலும் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 296,305 பெறுமதியான தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் கணக்கீடு | | |

செய்யப்பட்டிருக்கவில்லை.வ

**1.4 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- |
| 1988 இன் பிரதேச சபையின் (நிதி மற்றும் நிர்வாகம்) விதி 207 | நூலகப் புத்தகங்கள் மற்றும் சஞ்சிகைகள் கொள்வனவு செய்யும் போது பதிவு செய்த 4 வழங்குனர் நிறுவனங் களிடமிருந்து மாத்திரம் கூறுவிலை கோரப்பட்டு ரூபா 400,000 பெறுமதியான புத்தகங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. | விதிதளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | இதன் பின்னர் நிதி நிர்வாக விதி 207 இன் பிரகாரம் பெறுகை செயற்பாடு மூலம் புத்தகங்கள் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 21,066,405 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 17,727,479 ஆக இருந்தது.

**2.2 வருமான நிர்வாகம்**

**மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட் ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| i. | வீதவரியும் வரியும் | 4,223 | 4,346 | 4,615 | 2,639 | 3,083 | 3,777 | 3,358 | 2,904 |
| ii. | வாடகை | 8,030 | 13,445 | 13,670 | 328 | 4,917 | 5,635 | 5,466 | 553 |
| iii. | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 1,933 | 1,207 | 1,231 | 47 | 1,683 | 1,612 | 1,718 | 171 |
| iv. | ஏனைய வருமானம் | 85,137 | 75,406 | 84,956 | 23,852 | 77,322 | 69,535 | 69,531 | 37,390 |
| | மொத்தம் | 99,323 | 94,404 | 104,472 | 26,866 | 87,005 | 80,559 | 80,073 | 41,018 |

## 2.2.2 வீதவரியும் வரியும்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) ஓராண்டிற்கு மேற்பட்ட நிலுவை வீதவரி ரூபா 1,524,440 ஆக இருந்தது. | பிரதேச சபை சட்டத்தினதும் பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாக) விதிகளின் பிரகாரம் நிலுவை பணத்தை அறவிடுவதற்கு நவடிக்கை வேண்டும். | நிலுவை பணத்தை அறவிடுவற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) ஓராண்டிற்கு மேற்பட்ட நிலுவை ஏக்கர் வரி ரூபா 218,291 ஆக இருந்தது. | நிலுவை மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை வேண்டும். | மீதிகளை அறவிடுவதற்காக தேவையான நடவடிக்கைகள் எடுப்பதாக அறிய தருகின்றேன். |

## 2.2.3 வாடகை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய குத்தகை வாடகை மற்றும் கடை வாடகை முறையே ரூபா 280,498 மற்றும் ரூபா 47,760 ஆக இருந்தது. | நிலுவை வாடகைப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை வேண்டும். | நிலுவை பணத்தை எதிர்காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

### 2.2.4 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் அனுமதிப்பத்திரக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய ரூபா 2,538,586 ஆன நீதிமன்றத் தண்டப்பணமும் ரூபா 16,116,256 ஆன முத்திரைக் கட்டணங்களாக இருந்தது. | நிலுவை கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிலுவை கட்டணங்களை கொண்டு கொண்டு வருவதற்காக நடவடிக்கை எடுக்கப்படுமென அறிய தருகின்றேன் |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### ஒப்பந்த நிர்வாகம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 2017 சபை நிதியம் ரூபா 399,458 மூலம் ஹேஹாவிஸ்ஸ நூலக திருத்தம் மற்றும் அபிவிருத்தி செய்யும் வேலை விடயத்தின் 3 இற்குரிய நிறைவேற்றப்பட வேண்டிய வேலைப் பகுதி முறைப்ப நிறைவேற்றப்படாதிருக்கையில் ரூபா 377,976 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | உடன்படிக்கையின் பிரகாரம் வேலை பூர்த்தி செய்யப்பட வேண்டும். | செயற்திட்டம் தொடர்பாக உரிய உடைந்த பகுதிகளை மீண்டும் பரீட்சித்து பொதுச் சபையின் அங்கீகாரத்துடன் எதிர்காலத்தில் புனரமைப்பு செய்யப்படுவதாக அறிய தருகின்றேன் |
| (ஆ) 2017 ஆம் ஆண்டின் சபை நிதியத்தில் ரூபா 198,871 பயன்படுத்தி நியங்கம பிரதான வீதியின் எஞ்சிய பகுதி கொங்கிரீட் இட்டு அபிவிருத்தி செய்திருந்ததுடன் வீதியின் 40.5 சதுர மீற்றர் மேற்றளம் லகலன்று இருந்த போதும் 79.18 சதுர மீற்றர் அளவில் வெடிப்பும் 3.54 மீற்றர் அளவில் கொங்கிரீட் தளம் உடைந்தும் காணப்பட்டது. | உடன்படிக்கையின் பிரகாரம் வேலை பூர்த்தி செய்யப்பட வேண்டும். | கணக்காய்விற்கு உட்பட்ட திகதி திகதி அதாவது 2018 நவம்பர் 28 ஆந் திகதி வரை பராமரிப்புக் காலம் முடிவடைந்து உள்ளதுடன் 10’ நிறுத்திவைத்தல் பணம் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. ஆதலால் செயற்திட்டத்துடன் தொடர்பான குறித்த பழுதடைந்த பகுதியை மீண்டும் பரீட்சித்து பொது சபையின் அங்கீகாரத்துடன் எதிர்வரும் காலங்களில் திருத்தியமைப்பதாக அறிய தருகின்றேன் |